**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# துணிவுடன் பயங்கரவாதத்தை ஒடுக்கும் இந்தியா

## பிரதமர் மோடி

**புது தில்லி, நவ. 26:** மும்பையில் கடந்த 2008-இல் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு நினைவஞ்சலி செலுத்திய பிரதமர் நரேந்திர மோடி, 'நாட்டையே உலுக்கிய அந்தத் தாக்குதலில் இருந்து மீண்டதுடன், தனது முழுமையான துணிவுடன் பயங்கரவாதத்தை ஒடுக்கி வருகிறது இந்தியா' என்று கூறினார்.

107-ஆவது 'மனதின் குரல்' நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை (நவ. 26) ஒலிபரப்பானது. மும்பை தாக்குதல் நினைவு தினம் என்பதால், அதில் உயிரிழந்தோருக்கு நினைவஞ்சலி செலுத்தி, பிரதமர் மோடி பேசியதாவது:

நவம்பர் 26-ஆம் தேதியை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. நாட்டில் மிகக் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட தினம். மும்பை மட்டுமன்றி ஒட்டுமொத்த தேசத்தையும் பயங்கரவாதிகள் உலுக்கிவிட்டனர்.

ஆனால், அந்தத் தாக்குதலில் இருந்து மீண்டது மட்டுமன்றி, தனது முழுமையான துணிவுடன் பயங்கரவாதத்தை ஒடுக்கி வருகிறது இந்தியா. இதுவே, நமது தேசத்தின் வல்லமை.

**மக்களுக்கு வாழ்த்து:** நவ. 26-ஆம் தேதி மற்றொரு காரணத்துக்காகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடந்த 1949-ஆம் ஆண்டில் இதே தினத்தில்தான், நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை அரசியல் நிர்ணய சபை ஏற்றுக் கொண்டது.

2015-ஆம் ஆண்டுமுதல் இந்த தினம் அரசமைப்புச் சட்ட தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். ஒவ்வொருவரும் கடமைகளுக்கு முன்னுரிமை அளித்து ஒன்றிணைவதன் மூலம் இந்தியாவை வளர்ந்த நாடாக்கும் உறுதியை நிச்சயம் நிறைவேற்ற முடியும்.



**அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள்:** நமது அரசமைப்புச் சட்டத்தைத் தயாரிக்க 2 ஆண்டுகள், 11 மாதங்கள், 18 நாள்கள் செலவிடப்பட்டன. அதன் வரைவில் 2,000 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 60-க்கும் மேற்பட்ட நாடுகளின் அரசமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்து வரைவு தயாரிக்கப்பட்டது.

கடந்த 1950-ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு இதுவரை 106 முறை திருத்தப்பட்டுள்ளது. சூழ்நிலை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு அரசுகளால் பல்வேறு காலகட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், பேச்சு சுதந்திரம், கருத்துரிமையைக் குறைப்பதற்காக அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் துரதிருஷ்டவசமானது (நாட்டில் அவசரநிலை அமல்படுத்தப்பட்டதை பிரதமர் குறிப்பிட்டார்).

**மகளிர் இடஒதுக்கீடு மசோதா:** அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் 15 பெண் உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். அந்தக் காலத்திலேயே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் அரசமைப்புச் சட்டத்தைக் கொண்ட சில நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்கியது.

அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் தொலைநோக்குப் பார்வையின்படி, மக்களவை மற்றும் பேரவைகளில் மகளிருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டம் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

**உள்ளூர் பொருள்களுக்கு முன்னுரிமை:** உள்ளூர் பொருள்களுக்கு முன்னுரிமை என்ற பிரசாரத்துக்கு ஆதரவு பெருகி வருவது பாராட்டுக்குரியது. தற்போதைய விழாக் காலத்தில் நாட்டில் ரூ.4 லட்சம் கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது. 10 ஆண்டுகளில் இந்திய காப்புரிமைகளுக்கான அங்கீகாரம் 10 மடங்கு அதிகரித்துள்ளது.

திருமண நிகழ்ச்சிகளுக்கான காலகட்டம் தற்போது தொடங்கியுள்ளது. இதில் ரூ.5 லட்சம் கோடி வரை வர்த்தகம் நடைபெறும் என்று வர்த்தக அமைப்புகள் மதிப்பிட்டுள்ளன. சில குடும்பங்கள் தங்களது இல்ல திருமண நிகழ்ச்சிகளை வெளிநாட்டில் நடத்தும் போக்கு எனக்கு கவலையளிக்கிறது. இந்திய மண்ணில் நடத்தினால், நாட்டின் பணம் கரைகடந்து செல்லாது.

**நாடு முழுவதும் 65,000 குளங்கள்:** அரசின் அம்ருத் சரோவர் பிரசாரத்தின் கீழ் நாடு முழுவதும் 65,000 குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மக்களிடையே ரொக்கப் பரிவர்த்தனை குறைந்து, எண்மப் பரிவர்த்தனை அதிகரித்து வருகிறது. ஒரு மாதத்துக்கு முழுமையாக எண்மப் பரிவர்த்தனையைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார் பிரதமர் மோடி.

### கோவை லோகநாதனுக்கு பாராட்டு

ஏழைக் குழந்தைகளுக்கு உதவி வரும் கோவையைச் சேர்ந்த லோகநாதன் என்பவருக்கு மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார்.

'தமிழ்நாட்டின் கோவையில் வசிக்கும் லோகநாதன், தனது சிறு வயதிலேயே ஏழைக் குழந்தைகளின் கிழிந்த உடைகளைப் பார்த்து மனவேதனைக்கு உள்ளானார். ஏழைக் குழந்தைகளுக்கு உதவ உறுதியேற்ற அவர், தனது வருமானத்தின் ஒரு பகுதியை தானம் செய்யத் தொடங்கினார்.

பணத் தட்டுப்பாடு ஏற்பட்ட வேளையில், கழிப்பறைகளைத் தூய்மை செய்து, அதில் கிடைக்கும் பணத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு உதவும் பணியில் லோகநாதன் ஈடுபட்டார். கடந்த 25 ஆண்டுகளாக முழு அர்ப்பணிப்போடு இப்பணியில் ஈடுபட்டு வரும் அவர், இதுவரை 1500-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு உதவியுள்ளார். அவரது பணி ஈடு இணையில்லாதது' என்றார் பிரதமர்.

# சென்னையில் வி.பி.சிங் சிலை: முதல்வர் இன்று திறந்து வைக்கிறார்



**சென்னை, நவ. 26:** தமிழக அரசின் சார்பில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை (நவ. 27) திறந்து வைக்க உள்ளார்.

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் ரூ. 52 லட்சத்தில் வி.பி.சிங் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை காலை 11 மணியளவில் திறந்து வைக்கவுள்ளார்.

விழாவில், உத்தர பிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் குடும்பத்தினர் மற்றும் தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளனர்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விஸ்வநாத் பிரதாப் சிங் (வி.பி.சிங்) 25.6.1931-இல் அலாகாபாதில் பிறந்தார். தனது பள்ளிப் படிப்பை டேராடூன் கர்னல் பிரவுன் பள்ளியிலும், பின்பு புனே பெர்குசன் கல்லூரியில் இளநிலைப் பட்டமும் பெற்றார். 1950-இல் அலாகாபாத் பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பு பயின்றார்.

காந்திய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட அவர், சர்வோதய சமாஜத்தில் இணைந்து, பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்து தனது நிலங்களை தானமாக வழங்கினார்.

1980-இல் உத்தரபிரதேச பேரவைத் தேர்தலில் வென்று முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து சிறந்த முதல்வராகத் திகழ்ந்தார்.

1984-இல் மத்திய அரசில் நிதியமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய பதவிகளையும் வகித்தார். பின்பு, 1989-இல் நாட்டின் பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரதமராக இருந்தபோது தமிழக மக்களின் வாழ்வாதாரப் பிரச்னையான காவிரி நதிநீர் பிரச்னைக்கு தீர்ப்பாயத்தை அமைத்து தந்தார். சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்துக்கு காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்துக்கு அண்ணா பெயரையும் சூட்டினார்.

அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நிறைவேற்றினார். சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்துக்கு அரசுப் பணியிடங்களில் 27 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பி.பி.மண்டல் தலைமையிலான ஆணையத்தின் பரிந்துரையை வி.பி.சிங் செயல்படுத்தினார்.

அவரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் சிலை அமைக்கப்பட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# பருவமழை சவால்!

வடகிழக்குப் பருவமழைக் காலம் பாதியைக் கடந்துள்ள நிலையில், தமிழகத்தில் நிகழாண்டு போதுமான மழைப்பொழிவு இல்லை என்பது கவலையளிக்கிறது. தமிழகம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்வதுபோலத் தோன்றினாலும் மழை குறைவாகவே பெய்திருக்கிறது என்பதுதான் வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கும் செய்தி.

அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலகட்டத்தில் சராசரி மழைப் பொழிவின் அளவு 440 மி.மீட்டர். இது தமிழகம் பெறும் ஆண்டு மழை அளவில் 48%. அக்டோபர் 1-ஆம் தேதிமுதல் நவம்பர் 23-ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் தமிழகத்தில் 317 மி.மீட்டர் மழை பதிவாக வேண்டிய நிலையில், 286 மி.மீட்டர்தான் பதிவாகியிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது இயல்பைவிட 10% குறைவு. இதற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையும் ஒரு காரணம்.

பருவநிலை மாற்றத்தால் பருவமழைப் பொழிவு பாதிக்கப்படுகிறது. வழக்கமான மழை அளவு, அல்லது அதிகமாக பருவமழை பெய்வது என்பது அரிதினும் அரிதாக மாறிவிட்டது. 1977-ஆம் ஆண்டுமுதல் 2020-ஆம் ஆண்டு வரையிலான தரவுகளின்படி, வடகிழக்குப் பருவமழை ஒரே ஒருமுறை, 1984-ஆம் ஆண்டில் மட்டுமே முன்கூட்டியே தொடங்கியது. 1988, 1992, 2000 ஆகிய மூன்று ஆண்டுகளில் மிகத் தாமதமாக நவம்பர் 2-ஆம் தேதி தொடங்கியது.

வடகிழக்குப் பருவமழை பெரும்பாலும் அக்டோபர் 2-ஆவது வாரத்துக்குப் பின்னரே தொடங்கும். இந்த ஆண்டு சில நாள்கள் தாமதமாக அக்டோபர் 21-ஆம் தேதி தொடங்கியது. பருவமழை வழக்கமான அளவு பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்திருந்த நிலையில், அதற்கு மாறாக இதுவரை குறைவாகவே பெய்திருக்கிறது. ஏற்கெனவே தென்மேற்குப் பருவமழையும் இயல்பைவிட குறைவாகப் பெய்திருக்கும் நிலையில், வடகிழக்குப் பருவமழையும் ஏமாற்றம் அளிப்பது விவசாயிகளை பெரிய அளவில் பாதிக்கக்கூடும்.

தென்மேற்குப் பருவமழைக் குறைவைக் காரணம்காட்டி காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடகம் மறுத்து வருகிறது. தமிழகம் தனது பங்காக காவிரியில் 24,000 கனஅடி நீரை திறந்துவிட வலியுறுத்தி வரும் நிலையில், அந்த அளவு ஒவ்வொரு மாதமும் நடைபெறும் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் குறைந்துகொண்டே வருகிறது.

கடைசியாக அக்டோபர் 30-ஆம் தேதி நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில், டிசம்பர் இறுதி வரை காவிரியில் விநாடிக்கு 2,700 கனஅடி நீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டது. உச்சநீதிமன்ற இறுதி உத்தரவுப்படி தமிழகத்துக்கு நவம்பர் வரை 150 டிஎம்சி நீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும். ஆனால், இதுவரை 58 டிஎம்சி நீர் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது.

காவிரி ஒழுங்காற்றுக் குழு, மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகளின்படி காவிரியில் நீரைத் திறந்துவிட கர்நாடகம் மறுத்து வருவதால் மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இன்றி, காவிரி டெல்டாவில் வேளாண் சாகுபடி பாதித்திருக்கிறது. இச்சூழ்நிலையில் வடகிழக்குப் பருவமழையும் குறைந்தால் தமிழகத்தின் ஒட்டுமொத்த வேளாண் சாகுபடி மேலும் குறையக்கூடும். தமிழகத்தின் முக்கிய அணைகள் அனைத்திலும் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாத நிலையில், இதர மாவட்டங்களிலும் வேளாண்மை பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஆண்டுக்கு ஆண்டு தொடரும் மழைக் குறைவு பிரச்னையுடன், அண்டை மாநிலங்களுடனான நீர்ப் பங்கீடு பிரச்னைகளும், இயற்கைச் சீற்றங்களும் தொடரும் நிலையில், தமிழக விவசாயிகளின் துயரம் தொடர்கதையாகிவிட்டது. எதிர்பார்த்த அளவுக்கு சாகுபடி இல்லாதது, பயிர்களில் நோய்த் தாக்கம் என விவசாயிகள் எதிர்கொள்ளும் இதர பிரச்னைகள் ஏராளம். இவை அதிகரித்துக் கொண்டு வருகின்றனவே தவிர, குறைந்தபாடில்லை.

எந்த அளவுக்கு வடகிழக்குப் பருவமழை அதிக அளவு மழையைத் தருகிறதோ, அதே அளவு பேரிடரையும் தரவல்லது. புயல், சூறாவளி போன்ற இயற்கைச் சீற்றங்களும் இந்தக் காலகட்டத்தில்தான் அதிகம் ஏற்படுகின்றன. பருவமழையை எதிர்கொள்ள மாநில அரசு கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது.

தமிழகத்தில் பருவமழை சவாலைச் சமாளிக்கும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செப்டம்பர் மாதமே ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை, புறநகர் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் சாலை பராமரிப்புக்கு முன்னுரிமை அளிக்க வற்புறுத்தியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் நடைபெற்ற பணிகளால், மாநிலம் முழுவதும் பாதிப்புகள் குறைந்துள்ளன. அரசின் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பையும் பார்க்க முடிகிறது.

தலைநகர் சென்னையில் பருவமழைக்கு முன்பே மழைநீர் வடிகால் பணிகள் பெருமளவு நிறைவடைந்துவிட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சுரங்கப் பாதைகளில் மழைநீர் தேங்காமல் உடனுக்குடன் வெளியேற்றப்பட்டது. ஆனாலும்கூட, தாழ்வான பல பகுதிகளில் சாலைகளில் மழைநீர் தேங்கியதையும், மக்கள் பாதிப்புக்கு உள்ளானதையும் பார்க்க முடிந்தது.

வடகிழக்குப் பருவமழை பெரிய அளவில் இல்லாத நிலையில் இத்தகைய நிலை என்றால், திடீரென்று மழைப் பொழிவு அதிகரித்தால் அதை நிர்வாகம் எப்படி எதிர்கொள்ளும் என்கிற கேள்வி எழுகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தருணம் இது!

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# பிரார்த்தனைகள் பலிக்கட்டும்!

நாடு முழுவதும் மக்களின் மனங்களில் கடந்த பத்து நாள்களுக்கும் மேலாக ஒரு பிரார்த்தனை இருந்து வருகிறது. உத்தராகண்ட் மாநிலத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 41 தொழிலாளர்கள் விபத்தில் சிக்கி சுரங்கத்துக்குள் மாட்டிக் கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் மீட்கப்பட வேண்டும் என்று தேசம் முழுவதும் பதற்றத்தில் இருக்கிறது. விபத்து நடந்து பத்து நாள்களுக்கும் மேல் ஆகியுள்ள நிலையில் சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள சில்க்யாரா பகுதியில் 4.5 கிமீ நீளமுள்ள இருவழி சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கடந்த 12-ஆம் தேதி சுரங்கப்பாதை அமைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தபோது ஓரிடத்தில் மண் சரிந்து விழுந்து சுரங்கத்தினுள் 41 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். முதலில் விபத்தில் சிக்கிக் கொண்டவர்களின் உடனடித் தேவையான ஆக்சிஜன் வழங்குவதை மீட்புக்குழுவினர் வெளியில் இருந்து உறுதி செய்தனர்.

அதற்கென குழாய் நுழைக்கப்பட்டு ஆக்சிஜன் வழங்கப்பட்டது. உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, விபத்து நடந்த இடத்துக்கு நேரில் வந்திருந்து மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தினார். உள்ளே சிக்கிக் கொண்டவர்களின் அடிப்படைத் தேவையான உணவுக்கு உலர் பழங்கள் அந்தக் குழாய் வழியாக அனுப்பி வைக்கப்பட்டன.

உள்ளே சிக்கித் தவிக்கும் தொழிலாளர்களின் நிலை என்ன? எந்த நேரத்தில் என்ன நடக்குமோ? மீட்புப் பணிகள் எப்படி நடைபெறுகின்றன? இன்னும் காலதாமதம் இல்லாமல் மீட்டுவிட முடியுமா? நம்மிடம் இருக்கும் வசதிகள் போதுமா? அல்லது வெளிநாடுகளில் உதவிகள் பெற வேண்டிய அவசியம் ஏற்படுமோ என்று ஆயிரம் வினாக்கள் மக்கள் மனதில் தினம்தினம் எழுந்து கொண்டிருக்கின்றன.

சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணியில் தேசிய மற்றும் மாநிலப் பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி சம்பவ இடத்திற்கே நேரில் வந்து பணிகள் துரிதமாக நடைபெறத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். உடனடியாக பொக்லைன் மற்றும் பிற இயந்திரங்கள் மூலம் சுரங்கப்பாதைக்கு அருகில் உள்ள இடிபாடுகளை அகற்றும் பணியினை மீட்புக்குழுவினர் தொடங்கினர்.

கைவசம் இருந்த இயந்திரங்களைக் கொண்டு தொடங்கப்பட்ட இடிபாடுகளின் ஊடாகத் துளையிடும் முயற்சி தோல்வியில் முடிந்தது. அதனால் புதிய இயந்திரம் நவம்பர் 15-ஆம் தேதி தில்லியில் இருந்து வரவழைக்கப்பட்டது. மீட்புப் பணிகளுக்கான புதிய இயந்திரம் மூன்று பகுதிகளாக ராணுவ விமானம் மூலம் கொண்டுவரப்பட்டது. ஒரு மணிநேரத்திற்கு 5 மீட்டர் வரை தோண்டும் அளவுக்கு இந்த இயந்திரம் சக்தி வாய்ந்தது என நிபுணர்கள் கூறுகின்றனர்.


கோதை ஜோதிலட்சுமி

தில்லியிலிருந்து வந்துள்ள இயந்திரத்தைக் கொண்டு இடிபாடுகளில் துளையிட்டு ஒரு பாதையை உருவாக்கி அதில் ஒரு நபர் உட்புகுந்து வரும் அளவிலான குழாயை நுழைக்க வேண்டும். அதன் வழியாக உள்ளே சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் வெளியே வர வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தப் பணி நடைபெற்று வருகிறது.

உண்மையில் இது இலகுவான பணி அல்ல. மிகக் கடினமான செயல்முறை. இமயமலைப் பகுதிகளை நேரில் பார்த்தவர்கள் இதனை எளிதில் புரிந்து கொள்வார்கள். அங்கே மண் சற்றே மிருதுவானதாகவும் தளர்வாகவும் இருக்கும். நடக்கும் பொழுதே சறுக்கி விடும் தன்மை கொண்டதாக இருக்கும். இடிபாடுகள் அகற்றப்பட்ட பகுதிகளிலும் தளர்வான மண் மற்றும் சிறிய பாறைகள் விழுந்துகொண்டே இருப்பதால் தோண்டும் பணி தடைபடுகிறது. அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுவதால் பணி கடினமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் பணியில் பெரும் உழைப்பும் முயற்சியும் தொடர்கின்றன. எனினும், அதிலும் விமர்சனங்கள் எழுந்தவண்ணமே உள்ளன. சுற்றுச்சூழல் குறித்த முறையான பின்பற்றுதல் இல்லாததே இத்தகைய விபத்துக்குக் காரணம் என்று விமர்சிக்கின்றனர்.**

துளையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதை மட்டும் நம்பியிராமல் மீட்புக் குழுவினர், பூமியைத் தோண்டி இடிபாடுகளை அகற்ற முயன்றனர். அந்த முயற்சியும் தோல்வி அடைந்தது. இதற்கிடையே, உள்ளே சிக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு மருந்துப் பொருட்களும் ஆக்சிஜன் வழங்கும் குழாய் மூலமே அனுப்பி வைக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

மீட்புக் குழு அதிகாரிகளைப் பிரதமர் மோடி தொடர்பு கொண்டு நிலவரத்தைக் கேட்டறிந்ததோடு தேவையான அனைத்து வசதிகளுக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்யவும் உத்தரவிட்டார். இதனிடையே, சிக்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்து அவர்களின் குடும்பத்தினரிடையே பதற்றம் அதிகரித்தது. முதல்வர் அதையும் கவனித்துக் கொண்டார்.

உள்ளே இருக்கும் தொழிலாளர்களின் குடும்பத்தினர் அவர்களுடன் பேசுவதற்கும் அதே குழாய் வழியாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குடும்பத்தினரின் அன்பும் ஆறுதலும் உள்ளிருப்பவர்களின் மனதை பதற்றத்தில் இருந்து ஆறுதல்படுத்தும் என்ற நம்பிக்கை வெற்றி அடைந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

மீட்புப் பணியினை துல்லியமாகச் செய்து முடிக்க வசதியாக இருக்கும் என பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவன ரோபோடிக்ஸ் குழு, மீட்புப் பணி நடைபெறும் இடத்திற்கு வந்து நிலைமையை ஆராய்ந்ததோடு இரண்டு ரோபோக்களை மீட்புப் பணிக்கு அனுப்பி உதவியது.

ஹிமாலயத்தின் சிகரங்களும் பனிப்பாறைகளும் நிறைந்த மாநிலம் உத்தராகண்ட். அந்த மாநிலத்தின் பூமியானது நாம் வாழும் பகுதியினின்று முற்றிலும் மாறுபட்டது. சிறப்பாக செயல்படும் அந்த ரோபோக்களும் மீட்புப் பணி நடைபெறும் இடத்தின் மண்ணில் சிக்கிக் கொண்டு நகர முடியாமல் நின்றதால் நினைத்தபடி இன்னும் பலனளிக்கவில்லை.

சர்வதேச சுரங்கப்பணிகளுக்கான நிபுணர் குழுவும் வரவழைக்கப்பட்டுள்ளது. அர்னால்டு டிக்ஸ் என்ற சுரங்கப்பாதை மீட்பு நிபுணர் மீட்புப் பணிக்கென வரவழைக்கப்பட்டு அவரது ஆலோசனையும் பெறப்பட்டுள்ளது.

சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் பணியில் பெரும் உழைப்பும் முயற்சியும் தொடர்கின்றன. எனினும், அதிலும் அரசியலும் விமர்சனங்களும் எழுந்தவண்ணமே உள்ளன. சுற்றுச்சூழல் குறித்த முறையான பின்பற்றுதல்கள் இல்லாததே இத்தகைய விபத்துக்குக் காரணம் என்று பலர் விமர்சிக்கின்றனர். இருக்கலாம். முறையாக சுற்றுச்சூழலுக்கான விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

சூழ்நிலையின் கனம் உணர்ந்து சிக்கிக் கொண்டிருக்கும் அப்பாவித் தொழிலாளர்களை முதலில் பாதுகாப்பாக மீட்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவதே இன்றைய அவசியம். இந்தச் சிக்கல் தீர்ந்த பிறகு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை அதற்கான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஐந்து செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சுரங்கப்பாதையின் இரு புறங்களிலும் துளையிட்டுப் பாதை அமைக்கும் பணிகளும், சுரங்கத்தின் மேற்புறத்தில் இருந்து துளையிட்டு குழாய் அமைத்தல் சாத்தியமா என்பதை ஆராயும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது, மீட்புப் பணியில் முன்னேற்றமாக, முதல் வெற்றி கிடைத்திருப்பதாக மீட்புக் குழு அதிகாரிகள் கூறியுள்ளனர். சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் இருக்கும் முதல் விடியோ வெளியாகியுள்ளது. இந்த விடியோ தொழிலாளர்களை விரைவில் பத்திரமாக மீட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

மீட்புக் குழுவினர், ஆறு அங்குலம் அகலமுள்ள குழாயை வெற்றிகரமாக விபத்துப் பகுதியில் நிறுவியுள்ளனர். 'சுரங்கப்பாதையில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பல்வேறு முயற்சிகளில் நாங்கள் முதல் வெற்றியை அடைந்துள்ளோம். இதற்காக நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். இதுவே அவர்களை மீட்கும் முயற்சியின் முதல்படி. இதுவே எங்கள் முன்னுரிமை' என மீட்புக்குழு அதிகாரி தெரிவித்தார்.

புதிதாக நிறுவப்பட்ட குழாய் வழியாக கேமராவைச் செலுத்தி சிக்கியிருப்பவர்களைப் படம் பிடித்திருக்கிறார்கள். அந்த விடியோ அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. உள்ளிருப்பவர்கள் இந்தக் குழாய் மூலமாக உணவுப் பொருள்களைப் பெற்று உண்பதும் அந்த கேமராவில் பதிவாகியுள்ளது. இந்த விடியோ நாடு முழுவதும் ஆசுவாசத்தை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அரசும், நெடுஞ்சாலைத் துறையும் மீட்புப் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றன என்பதை அன்றாடம் செய்திகள் வெளிப்படுத்தி வருகின்றன. மீட்புப் பணிகள் ஒருபுறம் தீவிரமாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் அரசியலும் அதனைப் பயன்படுத்திக் கொள்வதில் முனைப்புக் காட்டுகிறது. இது அரசின் பொறுப்பற்ற செயல் என்பதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளும் தொடர்கின்றன.

41 பேர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் பிரதமர் அதில் கவனம் செலுத்தாது விளையாட்டில் கவனம் செலுத்துகிறார் என்ற விமர்சனம் அரசியல் களத்தில் எழாமல் இல்லை. ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையை வளர்ச்சிக்கு எதிரான எண்ணம் கொண்டவர்கள் பயன்படுத்திக் கொள்வதும் நிகழ்கிறது. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் கிடைக்கும் வாய்ப்புகளை எல்லாம் அரசியலாக்குவது அரசியல் கட்சிகளின் அடிப்படைப் பண்பு.

அதே நேரத்தில், உயிருக்குப் போராடுவோரின் நிலையை உணர்ந்து தேசத்தின் மூலை முடுக்குகளில் உள்ள மக்கள் தங்கள் பிரார்த்தனைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். மனிதாபிமானத்துடன் சமூக வலைதளங்களில் கூட்டுப் பிரார்த்தனைக்கான அழைப்புகளை விடுப்போரையும் காண முடிகிறது. அரசின் மீட்புப் பணி வெற்றியில் முடிய வேண்டும். அப்பாவியான ஏழைத் தொழிலாளர்கள் மீட்கப்பட வேண்டும் என்ற பிரார்த்தனைகள் பலிக்க வேண்டும்.

கட்டுரையாளர்:
ஊடகவியலாளர்.

# உத்தரகண்ட் சுரங்க விபத்து: மீட்புப் பணியில் இந்திய ராணுவம்

**உத்தரகாசி, நவ. 26:** உத்தரகண்டில் நிலச்சரிவால் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணியில் இந்திய ராணுவம் இணைந்தது.

குழாய் செலுத்தும் பாதையில் இடிபாடுகளில் சிக்கியுள்ள துளையிடும் 'ஆகர்' இயந்திரத்தின் பிளேடுகளை அகற்றுவதற்கான பணியை இந்திய ராணுவத்தின் 'பொறியாளர்கள் குழு' வீரர்கள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கினர்.

உத்தரகண்டின் உத்தரகாசி மாவட்டத்தின் சில்க்யாரா பகுதியில் கட்டப்பட்டு வந்த சுரங்கப் பாதை கடந்த 12-ஆம் தேதி ஏற்பட்ட திடீர் நிலச்சரிவைத் தொடர்ந்து இடிந்தது.

இதனால் சுரங்கப் பாதைக்குள் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த 41 தொழிலாளர்கள், கடுமையான இடிபாடுகளுக்குப் பின்னால் சிக்கிக் கொண்டனர்.

தொழிலாளர்கள் மயங்கி விடாமல் இருக்க ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வருகிறது.

இடிபாடுகள் வழியாக 6 அங்குலம் அகலமுள்ள குழாய் செலுத்தப்பட்டு, அதன்மூலம் அதிக அளவிலான உணவுகளையும் கைப்பேசி, அதற்கான மின்னேற்றிகளையும் அனுப்பப்பட்டன.

இதனிடையே, 60 மீட்டர் தொலைவுக்கு 80 செ.மீ. விட்டம் கொண்ட குழாயைச் செலுத்தி தொழிலாளர்களை மீட்பதற்கான பணிகள் தொடங்கி நடந்து வந்தன.

குழாயைச் செலுத்துவதற்கு துளையிடப்பட்ட பாதையில் இரும்புக் கம்பிகள் குறுக்கிட்டதால் மீட்புப் பணிகள் அவ்வப்போது நிறுத்தப்பட்டு மீண்டும் தொடங்கப்பட்டன.

துளையிடும் 25 டன் எடைக் கொண்ட ஆகர் இயந்திரம் நிறுவப்பட்டுள்ள கான்கிரீட் தளத்தில் விரிசல் ஏற்பட்டதால், மீட்புப் பணிகள் தொடர்வதில் சிக்கல் நிலவியது.

கான்கிரீட் தளத்தில் உண்டான விரிசல் சீர் செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை மாலை மீண்டும் பணிகள் தொடங்கப்பட்டன. தொடங்கிய ஒரு மணி நேரத்தில் ஆகர் இயந்திரத்தின் பிளேடுகள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டது. இதனால் கிடைமட்டமாக குழாய் செலுத்தும் மீட்புப் பணிகள் முழுவதுமாக முடங்கியது.

மீதமுள்ள 10-12 மீட்டர் தொலைவுக்கு பணியாளர்களே நேரடியாக குழாயைச் செலுத்துவதற்கு இயந்திரத்தின் பிளேடை அகற்றுவது அவசியமாகிறது.

இந்தப் பணியை மேற்கொள்ள இந்திய ராணுவத்தின் மெட்ராஸ் கட்டுமானப் படைப் பிரிவைச் சேர்ந்த பொறியாளர்கள் குழு வீரர்கள் ஹைதராபாத்தில் இருந்து சம்பவ இடத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்தனர். ராணுவ வீரர்களால் பணிகள் தொடங்கி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

வெள்ளிக்கிழமைக்கு முன்பு மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வந்த நிலையில், சில மணி நேரங்களில் தொழிலாளர்கள் மீட்கப்படுவார்கள் என்ற நம்பிக்கைச் செய்தி வெளியானது.

துரதிருஷ்டவசமாக ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக மீட்புப் பணிகள் மேலும் சில நாள்களுக்கு நீடிக்க இருக்கிறது. தொழிலாளர்களைக் காண 14 நாள்களாக நீளும் காத்திருப்பால் அவர்களின் குடும்பத்தினர் கவலையடைந்துள்ளனர்.



விபத்து நிகழ்ந்த பகுதியின் மேற்பகுதியிலிருந்து மீட்புப் பாதை அமைக்க ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற துளையிடும் பணியை ஆய்வு செய்த மத்திய இணை அமைச்சர் வி.கே.சிங்.



விபத்து மீட்புப் பணியில் இணைந்த ராணுவத்தினர்.

## செங்குத்தாக துளையிடும் பணிகள் தொடக்கம்

மலைக்கு மேலே இருந்து செங்குத்தாக 86 மீட்டருக்கு குழாயைச் செலுத்தி தொழிலாளர்களை மீட்பதற்கான மாற்றுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துளையிடும் பணிகள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கின. முதல் நாளில், 19 மீட்டர் ஆழத்துக்கு துளையிடப்பட்டது. எந்த இடையூறும் இல்லாத சூழலில், 100 மணிநேரத்தில் (4 நாள்கள்) தொழிலாளர்களை அடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையில் குறுக்கே உள்ள பாறைகளின் தன்மையைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

EVA STALIN IAS

# தமிழகத்தில் 4 நகரங்களில் ‘கேலோ இந்தியா’ போட்டிகள்

தமிழக அணிகளுக்கான தேர்வு சோதனைகள் நடைபெறும் இடமும், நேரமும்...

| | விளையாட்டு | பாலினம் | இடம் (சென்னை) | நாள் & நேரம் | |
|---|---|---|---|---|---|
| 1 | கூடைப்பந்து | பெண்கள் | ஜவாஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம் | 1.12.2023 | காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 2.12.2023 | காலை 7.00 மணி |
| 2 | கால்பந்து | பெண்கள் | ஜவாஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் | 30.11.2023 | காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 30.11.2023, 01.12.2023 | காலை 7.00 மணி |
| 3 | கபடி | பெண்கள் | மாவட்ட விளையாட்டு வளாகம், நேரு பூங்கா | 30.11.2023 | காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 1.12.2023 | காலை 7.00 மணி |
| 4 | கோ-கோ | பெண்கள் | மாவட்ட விளையாட்டு வளாகம், நேரு பூங்கா | 30.11.2023 | காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 1.12.2023 | காலை 7.00 மணி |
| 5 | வாலிபால் | பெண்கள் | மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கம் | 30.11.2023 | காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 1.12.2023 | காலை 7.00 மணி |
| 6 | ஹாக்கி | பெண்கள் | மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கம் | 30.11.2023 | காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 1.12.2023 | காலை 7.00 மணி |

**சென்னை, நவ. 26:** சென்னை, திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட நான்கு நகரங்களில் கேலோ இந்தியா போட்டிகள் நடைபெறவுள்ளன என தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் உடல்தகுதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசின் சார்பில் நடத்தப்படும் ஒருங்கிணைந்த விளையாட்டு நிகழ்வாகும். 2021-இல் ஹரியாணாவிலும், 2022-இல் மத்திய பிரதேசத்திலும் இப்போட்டிகள் நடைபெற்றன.

தமிழக முதல்வர் எடுத்த முயற்சியின் அடிப்படையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இப்போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளார்.

சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நான்கு நகரங்களில் வரும் 19.01.2024 முதல் 31.01.2024 வரை இப்போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் சுமார் 5000 விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நடத்தப்படவுள்ள விளையாட்டுகள்:** தடகளம், கால்பந்து ), குத்துச்சண்டை, வாள்வீச்சு) வாலிபால், பளு தூக்குதல், ஸ்குவாஷ், வில்வித்தை, ஜூடோ, கட்கா, டேபிள் டென்னிஸ், பாட்மிண்டன், சைக்கிள் ஓட்டுதல், கோ-கோ, யோகாசனம், மல்யுத்தம், ஹாக்கி, நீச்சல், ஜிம்னாஸ்டிக்ஸ், டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், களரிபயட்டு, மல்லர்க்கம்பு, கூடைப்பந்து, தாங் தா, கபடி, சிலம்பம்.

மேலும் நடைபெறவுள்ள கேலோ இந்தியா இளைஞர் போட்டியில் கூடைப்பந்து, கபடி, கோ-கோ, வாலிபால், ஹாக்கி மற்றும் கால்பந்து ஆகியவற்றில் தமிழக அணியும் இடம்பெற உள்ளது. வீரர்-வீராங்கனைகள், சிறப்பான செயல்திறனின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

- தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்-வீராங்கனைகளுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்படும்.
- பங்கேற்பதற்குத் தகுதிபெற, விளையாட்டு வீரர்கள் வயதுச் சரிபார்ப்பு செயல்முறைக்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் இரண்டினைச் சமர்ப்பிக்க வேண்டும். ஆதார் அட்டை அல்லது பாஸ்போர்ட், பள்ளிக் கல்விச் சான்றிதழ் (SSLC/10ஆம்வகுப்பு), பிறப்புச் சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு, மாநகராட்சி அல்லது கிராம பஞ்சாயத்து மூலம் ஜனவரி 1, 2013 அன்று அல்லது அதற்கு முன் வழங்கப்பட்டது) தகுதியுள்ள அனைத்து விளையாட்டு வீரர்-வீராங்கனைகளும் தேர்வு சோதனைகளில் பங்கேற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY